# செய்திகளும் குறிப்புகளும்

**18.04.2024, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1052**

---

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)
**14. பகுத்தறிவு கடந்த அழகு.**

இவையும் ஒப்பத்தவறானவை மற்றும் நடைமுறைக்கு ஒவ்வாதவை. நன்னெறி இருப்பு இந்த விதிமுறைகள் அனைத்திலிருந்தும் தப்பிவிடுகிறது. தனக்குத் தானே ஒரு விதிமுறையாக இருக்கிறது. மேலும் தன்னுடைய தத்துவத்தைத் தனக்கேயுரிய நித்தியமான இயல்பில் காண்கிறது, அத்தத்துவம் தன்னுடைய புவிவரலாற்றின் தொடக்கக் காலத்தில் அத்தகையதாகக் காணப்பட்ட போதிலும், அதனுடைய சாரமான தன்மையில் அது படிப்படியாக மலரும் மனத்தின் ஒரு வளர்ச்சியன்று, ஆனால் அது இலட்சியத்திலிருந்து வரும் ஓர் ஒளி: மனிதனில் இறைவனின் பிரதிபலிப்பு.

இந்தத் தவறுகள் எல்லாம் அவற்றின் தப்பான கட்டுமானங்களின் பின் ஒவ்வொன்றும் ஓர் உண்மையைக் கொண்டிருக்கவில்லை என்பதன்று பொருள்; ஏனென்றால் மனிதப்பகுத்தறிவின் அனைத்துத் தவறுகளும் தவறான உருவமைப்புகள், தவறான கட்டுமானங்கள், உண்மையின் ஒரு பக்கத்தின் அல்லது ஒரு பகுதியின் விளைவுள்ள உருத்திரிபுகள் ஆகும். பயன்பாடு என்பது வாழ்க்கையின் அனைத்து அடிப்படைத் தத்துவம், மேலும் வாழ்க்கையின் அனைத்து அடிப்படைத் தத்துவங்களும் இறுதியில் ஒன்றேயாகும்; ஆகையால் மிக உயர்ந்த நன்மை மிக உயர்ந்த பயன்பாடுமாகும் என்பது உண்மை. மிக அதிக எண்ணிக்கையானவர்களின் மிக அதிக நன்மை அன்று, ஆனால் எளிமையாக மற்றவர்களின் நலம், அதைவிட விரிவாக அனைவரின் நலம் – இது ஒன்றே நமது வெளிச்செல்லும் நன்னெறி நடைமுறைக்கான மிகச் சிறந்த நோக்கமாகும். நன்னெறி – மனிதன் அனைவருக்கும் உண்மையிலேயே நன்மையானது எது என்பதையும் காண்பானேயாகில், அதைத்தான் செயற்படுத்த விரும்புவான். ஆனால் இது நம்முடைய நன்னெறி நடைமுறையை ஒழுங்குப்படுத்த உதவுவதில்லை, அல்லது அதனுடைய இருப்பபைப் பற்றியோ அல்லது செயற்பாட்டைப் பற்றியோ அதனுடைய உள்ளார்ந்த தத்துவத்தைத் தருவதில்லை, ஆனால் நாம் பயணம் செய்வதற்கு மிகக் கடினமான அந்தச் சாலையினூடே, நம்முடைய வழியை உணரக்கூடிய பல ஆராய்வுகளுள் ஒன்றை மட்டுமே முன்னிலைப்படுத்தப்படுகிறது. பயன்பாடன்று நன்மையே, நன்மையின் தத்துவமாகவும், தரமாகவும் இருத்தல் வேண்டும்; இல்லாவிட்டால் சமயோசிதம் என்னும் அபாயகரமான பாசாங்குக்காரனின் கரங்களில் சிக்கிவிடுவோம், அவனுடைய முழு நடைமுறையும் நன்னெறிக்கு அயலானது. மேலும் பயன்பாட்டின் தரம் பயன்பாட்டின் மதிப்பீடு, அதன் போக்கு, அதனுடைய வடிவம், அதனுடைய செயற்பாடு இவை தனிமனிதனுடைய இயல்பு, மனத்தின் பழக்க வழக்கம், உலகின் மீதான கண்ணோட்டம் இவற்றிற்கேற்ப வேறுபாடடைந்தே தீரும். இங்கே அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய நம்பத்தக்க பொது விதிமுறை ஏதும் இருக்க முடியாது. ஓர் உண்மையான நன்னெறி நம்முடைய நடத்தைக்கு அளிக்க விரும்பும் விரிவான கட்டுப்படுத்தும் தத்துவங்களின் தொகுப்பு போன்ற எதுவும் இங்கே இல்லை. அல்லாமலும் நன்னெறி ஒருபோதும் லாப நஷ்டகணக்கு பார்ப்பதற்குரிய ஒரு விஷயமே அல்ல. நன்னெறி மனிதனுக்கு ஒரே பாதுகாப்பு விதியாக உள்ளது. அவனுடைய நன்மை பற்றிய தத்துவத்தை நன்மைக்கான அவனது இயலறிவை, அவனுடைய நன்மை பற்றிய அகக்காட்சியை, நன்மைக்குரிய அவனுடைய நேர்காணலைச் சிக்கெனப் பிடிப்பதும் அதனால் அவனுடைய நடத்தையைக் கட்டுப்படுத்துவதும் ஆகும். அவன் தவறிழைக்கலாம், ஆனால் அனைத்துத் தட்டுதடுமாறல்களும் இருந்த போதிலும், அவன் தன்னுடைய சரியான பாதையில் இருப்பான்; ஏனென்றால் அவன் தன்னுடைய இயற்கையின் தர்மத்திற்கு உண்மையாக இருப்பான். கீதையின் கூற்று எப்போதும் உண்மையாகும்; குறைபாடுகளுடன் செயற்பட்ட போதிலும் ஒருவன் தன் சொந்த தர்மத்தைப் பின்பற்றுவதே மிகநன்று. ஓர் அயல் விதிமுறை, அது நம்முடைய பகுத்திறிவுக்கு எவ்வளவு மிக உயர்ந்ததாகக் காணப்படினும் ஆபத்தானதே. ஆனால் நன்னெறி இருப்பின் இயற்கை தர்மம் நன்மையைக் பின்தொடர்வதாகும்; அது ஒருபோதும் பயன்பாட்டைப் பின்தொடர்வதாக இருக்க முடியாது.

அதனுடைய தர்மம் இன்பத்தை, அது உயர்ந்ததாயினும் அல்லது இழிந்ததாயினும், பின்தொடர்வதும் அல்ல; அல்லது எவ்வகையான சுய திருப்தியையும், அது எபபடிப்பட்ட நுண்மையானதாக அல்லது ஆன்மீகமானதாகவும் இருப்பினும், பின் தொடர்வதல்ல. இங்கே கூட மிக உச்சமான நன்மை அதனுடைய இயற்கையிலும் மற்றும் அதனுடைய உள்ளார்ந்த விளைவிலும் உச்சமான மகிழ்ச்சியாகும். ஆனந்தம் அதாவது ஜீவனின் மகிழ்ச்சியே அனைத்து உயிர்வாழ்க்கையின் ஊற்றாகும், மேலும் அதை நோக்கியே அது போகிறது, மற்றும் அதற்காகத்தான் அது வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ தன்னுடைய செய்கைகள் அனைத்திலும் தேடுகிறது. நன்மை வளர்வதில், நன்மை நிறைவேறுவதில், ஒரு மிகப் பெரிய இன்பம் இருக்கிறது என்பது கூட உண்மையே, மேலும் நன்மையை பின்பற்றுவதற்கு இன்ப நாட்டம் ஒரு அடிமன நோக்கமாக இருக்கலாம். ஆனால் நடைமுறைக் காரணங்களுக்கு இது அந்த விஷயத்தின் ஒரு பக்கத்தின் அம்சமேயாகும்; அது இன்பத்தை நன்மைக்கான ஒரு பரீட்சையாகவோ அல்லது தரமாகவோ ஏற்படுத்துவதில்லை. அதற்கு மாறாக, நன்மை சாதாரண மனிதனுக்கு அவனுடைய இன்பத்தை நாடும் இயல்பை எதிர்த்துப் போராடுவதால் வந்தடைகிறது; மேலும் அது பெரும்பாலும் தானாகவே துன்பத்தைதத் தழுவிக்கொள்வதாகவும் இருக்கிறது. அது துன்பத்தை அனுபவிப்பதால் வலிமையை மேம்பாடடையச் செய்துகொள்வதாகும். நாம் துன்பத்தின் இன்பத்திற்காகவோ அல்லது போராட்டத்தின் இன்பத்திற்காகாவோ, அந்தத் துன்பத்தையும் அந்தத் போராட்டத்தையும் தழுவிக்கொள்வதில்லை. ஏனென்றால் அந்த நம்முள் உள்ள இரகசியமான சித்பொருளினால் உணரப்பட்ட போதிலும், அந்தப் போராட்டத்தின் களமாக இருக்கும் நம்முடைய ஜீவனின் வழக்கமான உணர்வுப் பகுதியால் அந்த உயர்ந்த தீவிர மகிழ்ச்சி சாதாரணமாக அல்லது முதலில் உணரப்படுவதில்லை. நன்னெறி மனிதனின் செயல் ஓர் உள்ளார்ந்த இன்ப நாட்டத்தால் கூடத் தூண்டப்படுவதல்ல, ஆனால் அவனுடைய ஜீவனின் அழைப்பால், ஓர் இலட்சியத்தின் தேவையால், முழுமையான தரத்தின் ஒரு வடிவத்தால், இறைவனின் விதியால் ( a law of the Divine) தூண்டப்படுகிறது.

நம்முடைய ஏற்றத்தின் புறத்தோற்ற வரலாற்றில் இது முதலில் தெளிவாகத் தோன்றுவதில்லை, ஒரு வேளை தோன்றுவதே இல்லை என்று கூடச் சொல்லலாம், அங்கே சமுதாயத்தில் மனிதனுடைய பரிணாம வளர்ச்சியே அவனுடைய நன்னெறிப் பரிணாம வளர்ச்சியைத் தீர்மானிக்கும் காரணமாக இருப்பதுபோல் தோன்றுகிறது. ஏனென்றால், அவனுடைய சொந்த விருப்பம், பிராண இன்பம் அல்லது உலகாயதத் தன்னலம் இவையல்லாத, வேறொன்றின் உரிமைக்கோரிக்கையால் மட்டுமே நன்னெறி தொடங்குகிறது. மேலும் இந்த உரிமைக் கோரிக்கை முதற்கண், அவனுடைய சமுதாய வாழ்க்கையின் நிர்ப்பந்தத்தால், அவன் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவையின் மூலகம், அவன் மீது செயற்படுவது போல் தோன்றுகிறது. ஆனால் அது இந்த விஷயத்தின் உள் மையக்கருப்பொருள் அல்ல என்பது, நன்னெறிக் கோரிக்கை எப்போதும் சமுதாயக் கோரிக்கையுடன் இசைவுறுவதாக இல்லை. அல்லது நன்னெறித் தரம் எப்போதும் சமூதாயத் தரத்துடன் இணங்குவதாக இல்லை என்ற உண்மையால் சுட்டிக்காட்டப்படுகிறது. அதற்கு மாறாக நன்னெறி மனிதன் பெரும்பாலும் சமூதாயக் கோரிக்கையை உடைத்தெறிய, அதிலிருந்து விலகியிருக்க, அதன் தரத்தைக் தலைகீழாக்க, அதைப் புறக்கணிக்கவும் அதை எதிர்த்துப் போராடவும் அறைகூவியழைக்கப்படுகிறான். அவனுக்குப் பிறருடன் உள்ள உறவுகள் அவனுக்குத் தன்னுடனேயே உள்ள உறவுகள் இவை இரண்டும் அவனுடைய நன்னெறி வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்கள் ஆகின்றன.

*(தொடரும் .....)*

## **த க வ ல் க ள்** ( I N F O R M A T I O N )

**நமது உள் ஜீவனைத் தேடுதல் - சமூகத்தவருக்கான தகவல்**
(Seeking our Inner Being, an update to the Community)

அன்பார்ந்த நண்பர்களே,
உள் ஜீவன் (இன்னர் பீயிங்) குழுவான நாங்கள், உள்ளுணர்வின் மாற்றத்தை விரைவுபடுத்துவதற்காக, ஒருவரின் வாழ்க்கையின் மிக முக்கியமான பகுதி, ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரால் நமக்கு உணர்த்தப்பட்டபடி, ஒருவரின் உள் ஜீவன்/சைத்திய புருஷனுடன் அர்த்தமுள்ள உறவைத் தேடுதல், கண்டறிதல், பராமரித்தல் ஆகும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்த ஆன்மீக முயற்சியில் உண்மையாக ஈடுபட்டுள்ள உலகெங்கிலும் உள்ள பல மனிதர்களிடையே தொடர்புகளை உருவாக்குவதை கவனத்துடனும், மதிப்பீடு இல்லாமலும் ஈடுபடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்; தங்களின் ஆன்மீக அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் அனைவரும் பயனடைய அனுமதிக்கும் சான்றுகளை சேகரிப்பதன் மூலம் இதைச் செய்யலாம்.

முன்னோட்டம்: Podcast Series 1.

இந்த முயற்சி உங்களுக்கு எதிரொலித்தால், எங்கள் திரைப்படங்கள் (யூடியூப்) மற்றும் பாட்காஸ்ட்களை (ஸ்பாட்டிஃபை, யூடியூப் அல்லது அமேசான்) அணுக எங்கள் சேனல்களைப் பார்க்கவும், மேலும் உங்கள் தனிப்பட்ட பயணத்தில் பங்கேற்கவும் பகிர்ந்து கொள்ளவும் விரும்புகிறீர்களா என்பதைத் தீர்மானிக்கவும்.

நிதிப் பங்களிப்பை (எங்கள் நிதிச்சேவை கணக்கு 251939 மூலம்) மற்றும்/அல்லது எங்கள் நிதி திரட்டும் போர்ட்டலுக்கான இணைப்பை பரப்புவதன் மூலம் இந்த முயற்சிக்கு நீங்கள் தயவுசெய்து ஆதரவளிப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

நமது பூமி ஏங்கிக் கொண்டிருக்கும் உள்ளுணர்வின் மாற்றத்தை எளிதாக்க, நமது ஆன்மீகச் சக்திகளை ஒன்றிணைக்க மிகவும் எதிர்நோக்குகிறோம்,

உங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்,உண்மையுள்ள, *டான், இன்னர் பீயிங் குழு சார்பாக.*
innerbeing.auroville@gmail.com

---

## **அ றி வி ப் பு க ள்** ( A n n o u n c e m e n t s )

AUROFILM

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**ஏப்ரல் 26 வெள்ளிக்கிழமை, இரவு 8 மணிக்கு - "தி நைட் ஆஃப் தி இகுவானா" ("THE NIGHT OF THE IGUANA" ).**
இயக்கம் - **ஜான் ஹஸ்டன்,** அமெரிக்கா, 1964.
*நடிப்பு* - : ரிச்சர்ட் பர்டன், அவா கார்ட்னர், டெபோரா கெர், கிரேசன் ஹால், சிரில் டெலவந்தி
*ஆங்கில மொழியில், ஆங்கிலத் துணைவசனங்களுடன் - காலம்: 2 மணிநேரம் 05 நிமிடம்.*

---

Savitri
BHAVAN



**கனவு தெய்வீகம் தொடர்** (Dream Divine Series)

குறிப்பாக புதிதாய்ச்சேர்ந்தவர்களுக்கு (நியூகம்மர்) வழிகாட்டுவதற்கு **கனவு தெய்வீகம் தொடர்** ('தி ட்ரீம் டிவைன் சீரிஸ்') என்ற திட்டத்தை சாவித்ரி பவன் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆரோவில்லின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் புதிதாய்ச்சேர்ந்தவர்கள் (நியூகம்மர்) புரிந்துகொள்வதும், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் வாழ்க்கை மற்றும் படைப்புகள், பூரண யோகம் ஆகியன பற்றி அறிந்து கொள்வதும், இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். புதன்கிழமைதோறும் மாலை 4.30-5.30 மணிக்கு வாராந்திர அமர்வு நடைபெறும். இந்தத் தொடரில் விளக்கக்காட்சிகள், திரைப்படங்கள், உரைகள் போன்றவை அடங்கும், அதைத் தொடர்ந்து கேள்விகள், பதில்கள் அமர்வு.

**ஏப்ரல் 24, புதன்கிழமை அன்று, மாலை 4:30 - 5:30 மணிக்கு,**
**"Victory over the Adverse Forces"** "பாதகமான சக்திகளுக்கு எதிரான வெற்றி"
என்ற தலைப்பில் திரு. அலோக் பாண்டே அவர்களின் உரை.
**சாவித்ரி பவனில் உள்ள சங்கம் ஹால்**
அனைவரும் வருக.

---



**Integral Mathematics: A Journey of Insight and Inspiration (ஒருங்கிணைந்த கணிதம்: நுண்ணறிவு மற்றும் உத்வேகத்தின் பயணம்)**

பழங்கால சமஸ்கிருத நூல்கள் மூலம் கணிதத்தின் தரமான சாரத்தை ஆராயவும், ஸ்ரீ அரவிந்தரின் ஒளிமயமான உள்ளொளிகளை வாசித்து மறுஆய்வு செய்யவும், வரலாற்றின் மாபெரும் கணிதவியலாளர்களின் பாதைகளைக் கண்டறியவும். நுண்ணறிவு, உள்ளுணர்வு, அறிவுசார் ஆழம் ஆகிய குணங்களை வளர்த்து, கணித ஆய்வின் மாற்றும் சக்தியை வெளிப்படுத்த இந்தத் தொடர் உங்களை அழைக்கிறது.


**Sankhya Philosophy By Kapila Muni**
(கபில முனியின் சாங்கிய தத்துவம்)
**பிரகிருதி மற்றும் அதன் விகாரங்களைப் புரிந்துகொள்ளுதல்**

**ஏப்ரல் 27, சனிக்கிழமை, நேரம்: மாலை 4.00 - 5.00 மணி**
**சாவித்ரி பவன் சங்கம் ஹால்**
அனைவரும் வருக.

*நிகழ்ச்சி ஏற்பாடு - டீம் என்லைட் மற்றும் சாவித்ரி பவன்*

---

**ஆம்பித்தியேட்டர் - மாத்ரிமந்திர் (AMPHITHEATRE – MATRIMANDIR)**



**சுனிலின் இசையில் ஸ்ரீ அன்னை அவர்கள் வாசித்த சாவித்திரியுடன் தியானம்**
**மார்ச்சு 14 முதல் வியாழன்தோறும் சூரிய அஸ்தமனத்தில் மாலை 6.00 முதல் 6.30 வரை.**
நாங்கள் சூரியன் அஸ்தமனமாகும் நேரத்தை பின்தொடர்கிறோம், பருவகாலத்திற்கு ஏற்ப நேரம் மாறுகிறது…

ஆரோவில்லின் மையத்தில் உள்ள அழகிய திறந்தவெளியில், மகத்தான சூரிய அஸ்தமனத்தில், பரலோக இசையைக் கேட்டு மகிழுங்கள்!

*அனைவருக்கும் நினைவூட்டுகிறோம்:* ஒருமைப் பூங்கா (ஃபார்க் ஆஃப் யுனிட்டி) அமைதி, தியானம், அகப்பணிக்கான இடமாகும், ஆகவே, இந்த இடத்தை இதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்: கேமராக்கள், ஐ-பேடுகள், செல்போன்கள் போன்றவற்றைப் பயன்படுத்தக்கூடாது. புகைப்படங்கள் கூடாது.

அன்பான விருந்தினர்களே, உங்கள் விருந்தினர் அட்டையை உங்களுடன் எடுத்து வரவும். மாலை 5.45 மணி முதல் ஆம்பித்தியேட்டருக்கு மட்டுமே செல்ல முடியும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.
நன்றி, *ஆம்பித்தியேட்டர் அணி சார்பில் சூர்யா*

---

**மாத்ரிமந்திர் தன்னார்வலர்கள், குழந்தைகளுக்கு தற்காலிகமாக மூடப்படுகிறது**
(Matrimandir closed to volunteers and children)

அன்பார்ந்த அனைவருக்கும்,
மாத்ரிமந்திர் உள்அறை ஏசியில் சில வேலைகள் நடைபெறுவதால், ஏப்ரல் 15 முதல் ஏப்ரல் 20 வரை காலை 8:00 மணி முதல், தன்னார்வலர்கள் மற்றும் குழந்தைகளுக்கு மாத்ரிமந்திர் அறைக்கான அணுகல் மூடப்படும்.

ஆரோவில்வாசிகளுக்கு அவர்களுக்கான நேரங்களில் அறை திறந்தே இருக்கும்.
சிரமத்திற்கு வருந்துகிறோம். *மாத்ரிமந்திர் அணி*

---


**கொயட் ஹீலிங் சென்டர் கோடை விடுமுறை (Quiet Healing Center Summer Break)**

ஆண்டு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக கொயட் ஹீலிங் சென்டர் ஏப்ரல் 26 வெள்ளிக்கிழமை முதல் ஜூன் 17 திங்கள் வரை மூடப்படும். ஏதேனும் சிரமத்திற்கு வருந்துகின்றோம். *கொயட் ஹீலிங் சென்டர் குழு*

**ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் – பலவீனங்கள்**

**என்னுடைய பாதுகாப்பு உனக்கு எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது, மோசமான எதுவும் நடக்க முடியாது. ஆனால் நீ அச்சத்தை உதறித் தள்ள உறுதி கொள்ளவேண்டும், அப்பொழுது எனது சக்தி முழு ஆற்றலுடன் வேலை செய்ய முடியும்.**

**யோகமும் அச்சமும் ஒத்துப்போகாது.**



**ஆரோவில், இந்திய அரங்கம் (பெவிலியன்), பாரத் நிவாஸ் வழங்கும்-**
(Auroville, The Pavilion of India, Bharat Nivas presents)

**ஓப்பன்ஹைமர் vs. அர்ஜுனா** (OPPENHEIMER VS. ARJUNA)

பூமியின் விதி & மனசாட்சியின் சுதந்திரம்
சமகால மற்றும் நித்திய தார்மீக சங்கடங்கள்
ஓபன்ஹைமர் திரைப்படத்தின் ஒரு கலந்துரையாடல் மற்றும் திரையிடல்
விளக்கக்காட்சி மற்றும் கலந்துரையாடல்
வழங்குபவர் - பேராசிரியர் சேதேவ் குமார், அணு இயற்பியலாளர் மற்றும் அறிவியல் வரலாற்றாசிரியர்

- சில செயல்கள் செய்யப்படுமுன் கேள்வி கேட்கப்படும்.
- வேறு சில உறுதிசெய்யப்பட்ட பிறகு கேள்வி கேட்கப்படும்.
- அவற்றில் பெரும்பாலானவை கேள்வி கேட்கப்படுவதில்லை.
- நியாயப்படுத்துதல் மற்றும் பகுத்தறிவுபடுத்துதல் மற்றும் சுயநலம் ஆகியவற்றின் சக்திகள் *தர்மம்* மற்றும் மனித மனசாட்சியின் எந்த தார்மீக தூண்டுதலையும் விட வலிமையானதா?


மனித வரலாற்றில் 1945-இல் அணுசக்தி கட்டவிழ்த்து விடப்பட்டதை விட, பூமியின் தலைவிதியில் எந்த ஒரு நிகழ்வும் மிகவும் அழிவுகரமான வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.
'ஒரு வெடிகுண்டு தந்தை' பற்றிய ஓப்பன்ஹைமர் திரைப்படத்தைக் கருத்தில்கொண்டு, பகவத் கீதையில் நித்திய அர்ஜுன-கிருஷ்ணர் உரையாடலைக் கருத்தில்கொண்டு, இந்த விளக்கக்காட்சி உலகளாவிய அமைதி மற்றும் மனித தர்மத்தின் கேள்விகளை ஆராய்கிறது.
அமர்வு I : ஓப்பன்ஹைமர் & அர்ஜுனா: மனசாட்சி & தார்மீக சங்கடங்கள் 11:00 -12:00, பூமிகா ஹால்
அமர்வு II : ஓப்பன்ஹைமர் திரைப்படம் திரையிடல் 1:00 - 4:00 மணி, பாரத் நிவாஸ் அரங்கம்.
அமர்வு III : கருத்துகள் மற்றும் கேள்வி/பதில், 4:15-5:30 மணி, பூமிகா ஹால்
ஞாயிறு, ஏப்ரல் 21, 2024 பாரத் நிவாஸ் அரங்கம், காலை 11 - மாலை 6 மணி
அனைவரையும் வரவேற்கிறோம்...
பாரத் நிவாஸ் மெயின் கேட் வெளியே வாகனம் நிறுத்துமிடம் உள்ளது

---

**இறைவனுக்குத் தொண்டு செய்ய விரும்புவோருக்கான ஒரு பிரார்த்தனை**
(A prayer for those who wish to serve the Divine)

**எம்மனே போற்றி, தடைகளையெல்லாம் வெல்வோனே போற்றி.**
**எங்களிடமுள்ள எதுவும் நினது வேலையில் ஒரு தடையாக இராதபடி அருள்வாய்.**
**எதுவும் நினது வெளிப்பாட்டைத் தாமதப்படுத்தாதிருக்க அருள்வாய்.**
**எல்லாவற்றிலும், ஒவ்வொரு கணத்திலும் நினது சித்தம் நிறைவேறுமாறு அருள்வாய்.**
**ஒவ்வொரு கூறிலும், ஜீவனின் ஒவ்வொரு செயலிலும், மகோன்னத சிகரங்களிலிருந்து உடலின் சிறு அணுக்கள் வரை நினது சித்தம் எங்களில் நிறைவேற வேண்டும் என்று நாங்கள் இங்கு நின்முன் உள்ளோம்.**
**என்றென்றும், முற்றிலும் நினக்கு விசுவாசமுள்ளவர்களாக நாங்கள் இருக்குமாறு அருள்வாய்.**
**நாங்கள் வேறெந்தச் செல்வாக்கிற்கும் இடங்கொடாமல் முற்றிலும் நினது செல்வாக்கிற்கே உட்பட்டிருப்போம்.**
**நாங்கள் எப்பொழுதும், மறவாது நினக்கு ஆழ்ந்த தீவிர நன்றியுடையவர்களாக இருக்க அருள்வாய்.**
**ஒவ்வொரு கணமும் நீ எங்களுக்கு வழங்கிடும் அற்புதக் கொடைகளை நாங்கள் ஒருபோதும் வீணாக்காதபடி அருள்வாய்.**
**எங்களிலுள்ள ஒவ்வொன்றும் நின்னுடன் ஒத்துழைக்கவும், நினது சித்திக்கு எல்லாம் தயாராக இருக்கவும் அருள்வாய்.**
**போற்றி, எம்மனே போற்றி, எல்லா சித்திகளுக்கும் பரம நாதனாக உள்ளவனே போற்றி!**
**நினது வெற்றியில் சுறுசுறுப்பான, தீவிரமான, பூரணமான அசைக்க முடியாத நம்பிக்கையை எங்களுக்கு அருள்வாய்.**

**1937 அக்டோபர் 23**



## <u>உடற்கல்விக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை- ஆரோவில்லில் 1 ஆண்டு படிப்பு</u>

<u>(Integral Approach to Physical Education- One year course in Auroville)</u>

ஆரோவில் உடற்கல்வி வாரியம் (ஏவிபிஇபி, சையர்) ஆரோவில்லின் (AV) உடற்கல்வி (PE) ஆசிரியர்களுக்கான அடிப்படை ஆசிரியர் பயிற்சி பாடத்திட்டத்தை வடிவமைத்துள்ளது. இந்த விரிவான திட்டம் ஆரோவில்லின் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு கற்பித்தல் மற்றும் ஸ்ரீஅரவிந்தர், ஸ்ரீஅன்னையின் வழிகாட்டுதலை கருத்தில்கொண்டு உடற்கல்வி பற்றிய அடிப்படை அம்சங்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

வரவிருக்கும் ஆண்டுகளில் ஆரோவில்லிற்கான ஒரு புதிய உடற்பயிற்சி ஆசிரியர் குழுவை உருவாக்குவதே இதன் நோக்கமாகும், அதன் உடற்பயிற்சி ஆசிரியர்கள் விளையாட்டு அறிவியல் பற்றிய அறிவும், நடைமுறை பயிற்சியும், மனித உடலின் ஆன்மீக முக்கியத்துவம் பற்றிய ஆழமான புரிதலையும் கொண்டிருக்க வேண்டும். இந்தப் புதிய குழுவானது உடற்கல்வி வகுப்புகளை நடத்துதல், ஆராய்ச்சி நடத்துதல், ஆரோவில் பள்ளிகளுக்கும் சமூகத்திற்கும் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை சிறப்பாக ஏற்படுத்திக்கொடுத்து பயனுள்ளதாக செயல்படும்.

**<u>இப்பாடத் திட்டத்தின் முக்கியக் கூறுகள்-</u>**

| **ஒருங்கிணைந்த கல்வியின் கொள்கைகள்:** | **விளையாட்டு அறிவியல்:** | **செயற்முறை பயிற்சி:** |
|---|---|---|
| முதன்மை வழிநடத்துநர்: பிரவீன் அவர்கள் ஸ்ரீஅரவிந்தர் ஆசிரமத்தின் உடற்பயிற்சி குழுவின் உறுப்பினர் ஆவார். | முதன்மை வழிநடத்துநர் - சாவித்திரி - விளையாட்டு அறிவியல்/ஊட்டச்சத்து துறையில் இளநிலை பட்டம் பெற்றுள்ளார், விளையாட்டு மற்றும் ஊட்டச்சத்து துறையில் முதுநிலை பட்டம் பெற்றுள்ளார். | முதன்மை வழிநடத்துநர்: பெட்ரோ, ரூபன்<br>பெட்ரோ - விளையாட்டு அறிவியலில் இளநிலைப்பட்டம், முதுநிலைப் பட்டம், முனைவர் பட்டம் பெற்றவர்.<br>ரூபன் - மனநலக் கல்வியாளர், தற்காப்பு கலை பயிற்றுனர். |
| **முக்கியத் தலைப்புகள்-**<br>• ஒருங்கிணைந்த யோகா அறிமுகம்<br>• ஆரோவில்லின் நோக்கங்களும் இலட்சியங்களும்<br>• கல்விக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் புரிந்து கொள்ளுதல்<br>• ஆன்மீகம் மற்றும் மன நலம்:<br>• யோகா மற்றும் தியானப் பயிற்சிகள்<br>• உடற்கல்வியின் உளவியல் அம்சங்கள்<br>• மன அழுத்த மேலாண்மை நுட்பங்கள் | **முக்கியத் தலைப்புகள்-**<br>• உடற்கூறியல் மற்றும் உடலியல்<br>• பயோமெக்கானிக்ஸ்<br>• உடற்பயிற்சி உடலியல்<br>• விளையாட்டுக்கான ஊட்டச்சத்து<br>• விளையாட்டின்போது ஏற்படும் காயங்கள் மற்றும் சிகிச்சைகள்<br>• விளையாட்டு சமூகவியல் | **முக்கியத் தலைப்புகள்-**<br>• ஆரோவில் பள்ளிகளில் கற்பிக்கும் பயிற்சி<br>• கற்பிக்கும் கலை மற்றும் கற்பிக்கும் முறைகள்<br>• புரிந்துகொள்வதற்கான கற்பித்தல் விளையாட்டுகள் (TGFU)<br>• பாடத் திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதல்<br>• மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டு நுட்பங்கள்<br>• வகுப்பறை மேலாண்மை உத்திகள்<br>• வழிகாட்டுதல் மற்றும் கருத்துகேட்பு அமர்வுகள்<br>• உடற்கல்வி அமைப்புகளில் செயல்திட்டத்தை செயல்படுத்துதல்<br>• முதலுதவி பயிற்சி |

**பங்கேற்பதற்கான அளவுகோல்கள்:**

- இப்பயிற்சி அனைவருக்கும் பொதுவானது, ஆரோவில்லில் உடற்பயிற்சி ஆசிரியராக பணியாற்ற விரும்புவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- இந்தத் திட்டத்தில் பங்கேற்பவர்களின் முதன்மையான பணி:
  - ஈடுபாட்டுடன் கற்றுகொள்ளல்
  - ஓராண்டு படிப்பை இடைவிடாமல் தொடர்வதற்கு உறுதியளித்தல்

**சேர்க்கைக்கான தேவைகள்:**

ஆரம்பத்தில், பல்வேறு ஆரோவில் பள்ளிகளில் உடற்பயிற்சி கல்விக்கான பயிற்சி/ கற்பித்தல் வகுப்பு வாரத்தில் ஆறு நாட்கள், திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 2:30 மணி முதல் மாலை 5:00 மணி வரை பகுதிநேரம் பங்கேற்பவர்களுக்காக இந்த பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆண்டு முழுவதும், பங்கேற்பாளர்களின் பணியின் தரம் தொடர்ந்து மதிப்பிடப்பட்டு, ஆண்டின் இறுதியில் தேர்ச்சி தரத்தை அடைவதற்கான மதிப்பீடு, மதிப்பாய்வு செய்யப்படும்.

**ஆரோவில்வாசிகள் மற்றும் புதிதாய்ச்சேர்ந்தோர்களுக்கான ஆதரவு:**

முடிந்தவரை பெரும்பாலான பங்கேற்பாளர்கள் இந்த பாடத்திட்டத்தில் பங்கேற்க, ஏவிபிஇபி பங்கேற்பாளர்களுக்கு பொருள் ஆதரவை உறுதிப்படுத்தும் வகையில் செயல்படும். நிதி நெருக்கடி அல்லது கவலைகள் காரணமாக எந்தவொரு ஆர்வலரும் இந்த வாய்ப்பை இழக்கக்கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம்.

இந்த பாடத்திட்டத்தின் முடிவில், ஒவ்வொரு பங்கேற்பாளரும் ஆரோவில்லில் உள்ள புதிய உடற்கல்வி ஆசிரியர் குழுவில் ஒருங்கிணைத்து, ஆரோவில்லின் மற்ற ஆசிரியர்களுக்கு இணையான ஆசிரியராக ஆக முடியும்.

**தொடர்புக்கு:**

இப்படிப்பில் சேர உங்களுக்கு ஆர்வமாக இருந்தால் அல்லது இது குறித்து மேலும் விபரம் அறிய விரும்பினால், கீழே உள்ள இணைப்பை கிளிக் செய்யவும் அல்லது கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து படிவத்தை பூர்த்தி செய்யவும்-

https://docs.google.com/forms/d/e/1FAIpQLSeXxZV8tE7AtdWPC9LZ4A7zMBbO7OwR5CZ6C8rPQao7wFT8-Q/viewform?usp=sf_link

*நன்றியுடன், நீலிமா, சையர் சார்பில்*

**சேவாவின் அறிவிப்பு** (Announcement From SEWA)

முதன்மைச் செயலர்/தொழிலாளர் ஆணையர் அவர்களின் **27.03.2024 தேதியிடப்பட்ட குறிப்பாணை எண். S4/9336/2024 இன் படி**, இந்தியத் தேர்தல் ஆணையம் **19.04.2024 (வெள்ளிக்கிழமை)** 2024, மக்களவைத் (லோக்சபா) தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறும் நாளாகக் குறிப்பிட்டுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951-இன் பிரிவு 135(B)-இன் படி, வாக்குப்பதிவு நடைபெறும் நாளில் ஊழியர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறையை வழங்குவதை கட்டாயமாக்குகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள சட்டப்பூர்வ தேவைகளுக்கு இணங்க, உங்கள் மேற்பார்வையின் கீழ் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் 19.04.2024 வெள்ளியன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படுவதை உறுதிசெய்யுமாறு அனைத்து நிர்வாகிகளையும் கேட்டுக் கொள்கிறோம்.
இது தொடர்பான கூடுதல் விவரம் அல்லது விளக்கம் தேவை எனில், sewa@auroville.org.in என்ற மின்னஞ்சலுக்கு எழுதவும்.
*சேவாவின் சார்பில், சஞ்சீவி*

**ஆட்டம் இடம் - விளையாடுவதற்கான இடம்** (AATTAM IDAM – a place for playing)



இந்த 4 நாள் நடனம் மற்றும் இயக்கப் பயிலரங்கு "ஆட்டம்" என்ற கருத்தை மையமாகக் கொண்டது. இந்த பட்டறை பங்கேற்பாளர்கள் தங்கள் படைப்பாற்றல் மற்றும் நடன வெளிப்பாடுகளைத் திறக்கும்போது மறக்கமுடியாத தருணங்களை ஆராயவும், கற்றுக்கொள்ளவும் இணைந்து உருவாக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கட்டமைக்கப்பட்ட செயல்பாடுகள் மூலம், தனிப்பட்ட மற்றும் குழு இயக்கத்தில் புதிய இயக்கமுறைகள், பயனுள்ள உடல் மற்றும் தகவல் தொடர்பு திறன்களை உருவாக்குவதற்கான வாய்ப்பைப் பெறுவீர்கள்.
உங்கள் பின்னணியைப் பொருட்படுத்தாமல், வாருங்கள்! இந்த விளையாட்டு மற்றும் படைப்பாற்றல் பயணத்தில் இணையுங்கள்.
இந்த வளமான அனுபவத்திற்காக உங்கள் இடத்தை இப்போதே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்!

**தேதி: ஏப்ரல் 23 முதல் 26 வரை. நேரம்: காலை 9:30 முதல் மதியம் 02:00 வரை. இடம்: கிரிபா, ஆரோவில்**

விவரங்களுக்கு, aurovilleartworld@gmail.com -ஐத் தொடர்பு கொள்ளவும்.

---



**ஆரோவில், இந்திய அரங்கம் (பெவிலியன்), பாரத் நிவாஸ் வழங்கும்-**
(Auroville, The Pavilion of India, Bharat Nivas presents)

**PATHWAY TO DIVINE CONSCIOUNESS (தெய்வீக உணர்வுக்கான பாதை)**

எல்லா மனிதர்களும் வெவ்வேறு நிலைகளில் உள்ளுணர்வு மற்றும் வளர்ச்சியைக் கொண்டுள்ளனர். உள்ளுணர்வு மட்டுமே வாழ்க்கையின் நோக்கம். வாழ்க்கை மூலம், நாம் அனைவரும் அதி-உள்ளுணர்வை அடையும் வரை உள்ளுணர்வில் வளர ஒரு சிறந்த வாய்ப்பு உள்ளது. உள்ளுணர்வை வளர்ப்பது எப்படி...

**வழிநடத்துபவர் - அருண் குமார் -** தயவுசெய்து என்னுடன் வந்து ஆராயுங்கள்
**தேதி: 20 ஏப்ரல், மாலை 06:00, சனிக்கிழமை, இடம்: ஹார்மனி ஹால், பாரத் நிவாஸ்,**

அனைவரும் தங்கள் கேள்விகளுடன் கலந்துகொள்ள வரவேற்கிறோம்.
தங்கள் அனைவருக்கும் நன்றி.
*விசாரணை தொடர்புக்கு: கிருஷ்ணா +91 97878 80211*
*பாரத் நிவாஸ் மெயின் கேட் வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது*

---

**நியூஸ் அண்ட் நோட்ஸுக்கு ஆதரவாக** (In Support of Our News and Notes)

அன்பார்ந்த சமூகத்தவருக்கு,
நியூஸ் அண்ட் நோட்ஸ் 966, 2023 மார்ச் 16-இல், ஆரோவில் கவுன்சில் என்று அழைக்கப்படுபவர்கள் மற்றும் சில குழுக்கள், நியூஸ் அண்ட் நோட்ஸ் குழுவிற்கு எச்சரிக்கை விடுத்து, அவர்களை பதவியில் இருந்து நீக்கிவிடுவதாகவும், இறுதியில், அவர்களது அலுவலகத்தை கைப்பற்றி பூட்டி வைக்கும் எண்ணம் இருப்பதாகவும் மிரட்டினர். இயற்கையாகவே, சில காலம் அக்குழுவிற்கு நிறைய தொல்லைகள் தொடர்ந்தாலும் அது நிறுத்தப்பட வேண்டியிருந்தது.

மீண்டும், இந்தக் குழு பல்வேறு பிரிவுகளையும், மக்கள் தங்கள் அறிவிப்புகளை நியூஸ் அண்ட் நோட்ஸ்க்கு அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருப்பதை மீண்டும் நாங்கள் அறிந்துகொள்கிறோம், இது கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புள்ள குழுவுடன் நமது முக்கிய மற்றும் நீண்டகால உள் செய்திமடலாகும். இத்தகைய புறக்கணிப்புகளை ஊக்குவித்தல், நமது பணிக்குழுக்களை அவதூறு செய்தல் மற்றும் அச்சுறுத்தல்கள் அல்லது நீதிமன்ற வழக்குகளை வெளியிட்டு அவர்களின் பணிக்கு இடையூறு விளைவிப்பது, அத்தகைய குழுக்களின் இத்தகைய அணுகுமுறைகள் மற்றும் செயல்களால் ஆரோவில்லில் உருவாக்கப்பட்ட மோசமான எண்ணத்திற்கு இது சாட்சியமளிக்கிறது.

அனைத்து ஆரோவிலில்வாசிகள், குழுக்கள் ஆகியோர் தங்கள் கட்டுரைகள், அறிவிப்புகள் ஆகியவற்றை வழக்கம்போல் நியூஸ் அண்ட் நோட்ஸுக்கு அனுப்பவும், நம் சமூகத்திற்கான அவர்களின் பணிகளுக்கு ஆதரவளிக்கவும் கேட்டுக்கொள்கிறோம்.
அன்புடன், செயற்குழு - *அனு, அருண், ஜோசபா, பார்த்தா, செல்வராஜ், டினா*

---